**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**S.C. NO.36/2016**

**04.10.2023 - அ.சா. 1 கல்பனா மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் கணவரை ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் தகவல் அறிந்து தான் நான் மருத்துவமனை சென்றேன். நான் சென்று பார்த்த போது என் கணவர் பேச முடியாத நிலையில் இருந்தார் என்றால் சரிதான். போலீசார் என்னிடம் எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான். நான் தான் அ.சா. 2 , 3, 4 ஆகியோர்களுக்கு தகவல் சொன்னேன். என் கணவருக்கு ஏற்பட்ட காயங்கள் எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. என் கணவரை மேல் சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் போது அவர் இறந்து விட்டார். சா.பொ.1 முதல் 3 காவல் துறையினர் என் வீட்டில் இருந்து என்னிடம் கேட்டு வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். என் கணவருக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். போலீசார் சொல்லிக் கொடுத்தின் பேரில் நான் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

ஒம்/- கல்பனா

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**S.C. NO.36/2016**

**04.10.2023 - அ.சா. 2 சிவபாக்கியம் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இவ்வழக்கில் இறந்து போனவர் என் மகன். என் மகனை அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பது என் மருமகள் அ.சா.1 சொல்லிதான் தெரியும். என் மகனை வேலூர் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு கொண்டு செல்லும் போது இறந்து விட்டார் என்றால் சரிதான். என் மகனுக்கு எப்படி காயங்கள் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. போலீசார் சொல்லிக் கொடுத்தின் பேரில் நான் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். என் மகனுக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான்.

ஒம்/- சிவபாக்கியம்

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**S.C. NO.36/2016**

**04.10.2023 - அ.சா. 3 பூமிநாதன் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இவ்வழக்கில் இறந்து போன பரசுராமன் என் மைத்துனர். என் மைத்துனரை அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பது என் சகோதரி அ.சா.1 சொல்லிதான் தெரியும். என் மைத்துனரை வேலூர் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு கொண்டு செல்லும் போது இறந்து விட்டார் என்றால் சரிதான். என் மைத்துனர் பரசுராமனுக்கு எப்படி காயங்கள் ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. பரசுராமனுக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். போலீசார் சொல்லிக் கொடுத்தின் பேரில் நான் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

ஒம்/- பூமிநாதன்

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.